# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.
## C.C. No. 251/2025 PW.1

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | தியாகராஜன் | த–பெ | மெய்யப்பன் |
| ஊர்: | : | நாச்சியார்புரம் | சமயம் | |
| வயது: | : | 64/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | விவசாயம் | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 08.07.2026**

-----------------------------------------------------------------------------------------------------

**08.07.2026**

**குறுக்கு விசாரணை**

1) நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்கிறேன் என்றால் சரியல்ல. நான் எந்த ஊரில் விவசாயம் செய்கிறேன் என்றால் நாச்சியார்புரம். எனக்கும் என் தகப்பனாருக்கும் தற்போது நல்ல உறவு முறை உள்ளதா என்றால் இல்லை, பேசிக்கொள்வதில்லை. எதிரி எனது தந்தை மூலமாக பழக்கம் என்று எனது புகாரில் கூறியுள்ளேன் என்றால் இல்லை, ஊர் மூலமாக பழக்கம். எதிரி எனது உறவு முறை இல்லை என்றாலும், எதிரியின் கணவர்தான் எனக்கு உறவு முறை என்றாலும் சரியல்ல. இரண்டு நபர்களும் எனக்கு உறவு முறை இல்லை. எதிரியின் கணவர் மூலமாகத்தான் எனக்கு எதிரியை தெரியும் என்றாலும், எதிரியை நேரடியாக தெரியாது என்றாலும் சரிதான். எதிரியும் நான்னும் ஒரே சமூகத்தை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். எதிரி என்ன தொழில் செய்கிறார் என்று எனக்கு தெரியுமா என்றால் பணம் கொடுத்து வாங்கும் தொழில் செய்வதாக கேள்விபட்டேன், சரியாக தெரியாது.

2) என்ன தேவைக்காக எதிரி என்னிடம் பணம் கேட்டார் என்றால் இக்கட்டான சூழ்நிலை எனவே பணம் அவசரமாக தேவை என்று கேட்டார். கொடுத்ததாக கூறும் தொகை வங்கி மூலமாக கொடுத்தேனா என்றால் ரொக்கமாக கொடுத்தேன். எங்கு

வைத்து பணம் கொடுத்தேன் என்றால் காரைக்குடியில் குடியிருக்கும் எனது வீட்டில் வைத்துக்கொடுத்தேன். எனது புகார்மனுவில் எந்த தேதியில் எங்கு வைத்து பணம் கொடுத்தேன் என்று குறிப்பிடவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ரொக்கமாக பணம் கொடுத்த போது யார் உடன் இருந்தார்கள் என்றால் எதிரி மட்டும்தான் இருந்தார். கொடுத்ததாககூறும் தொகை எதிரியின் கணவர் நாச்சியப்பனுக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பணம் கொடுக்கும்போது கடனுறுதிசீட்டு எழுதிப்பெற்றேனா என்றால் இல்லை. எதிரிக்கு எந்த தேதியில் பணம் கொடுத்ததாக புகார் மனுவில் கூறியுள்ளேன் என்றால் 01.07.2025. எதிரி எப்போது என்னிடம் பணம் கேட்டார் என்றால் பணம் கொடுத்தற்கு ஒரு நாள் முன்பு கேட்டார். 30.06.2025 ல் எதிரி பணம் கேட்டார் என்று எனது புகாரில் குறிப்பிடவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3) வீட்டில் வைத்திருந்த ரூ.3,00,000/- கொடுத்தேன் என்றால் விவசாயம் செய்து என் மகனின் திருமணத்திற்காக வைத்திருந்த தொகையை கொடுத்தேன். ரூ.3,00,000/- தொகையை வங்கியில் இருந்து எடுத்து வீட்டில் வைத்திருந்தேன் என்றால் சரியல்ல, வீட்டில் வைத்திருந்ததை கொடுத்தேன். விவசாயம் செய்வற்காக அடங்கல் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் இல்லை, இயற்கை வகை விவசாயம் செய்கிறேன். விவசாயம் செய்வது தொடர்பாக என்னிடம் எந்த ஒரு ஆவணமும் இல்லை என்றால் சரிதான். எதிரியின் கணவர் நாச்சியப்பன் மீது தற்போதைய நீதிமன்றத்தில் என் தந்தை வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரியின் கணவர் நாச்சியப்பனுக்கு பாலசுப்பிரமணியன் என்பவர் மூலமாக கம்பனூர் அருகே நான் 30 சென்ட் வாங்கி கொடுத்தேன் என்றால் இல்லை, தியாகராஜன் என்பவருக்குதான் வாங்கி கொடுத்தேன். 30.11.2024 ல் வினைதீர்த்தான் என்பவர் மேற்படி இடம் அவருடையது என்று கூறி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

4) 9791846036 என்ற தொலைபேசி எண் யாருடையது என்றால் என்னுடையதுதான். அதற்கு G-Pay மற்றும் வாட்ஸ்அப் பேமன்ட் உள்ளது என்றால் சரிதான். மேற்படி எண்ணிலிருந்து எதிரியின் கணவர் நாச்சியப்பனுக்கு போன் செய்துள்ளேனா என்றால்

நினைவில்லை. எனது எண்ணிற்கு நாச்சியப்பன் G–pay மூலம் பணம் எனக்கு கொடுத்துள்ளார் என்றால் நினைவில்லை. எனது வங்கி பரிவர்த்தனையை பார்த்தால் நாச்சியப்பன் பணம் அனுப்பிய விபரம் தெரியுமா என்றால் பணம் அனுப்பிய விபரம் எனக்கு தெரியாது. வங்கி பரிவர்த்தனை தேவைப்பட்டால் பார்வையிடலாம். எனது வாட்ஸ்அப் எண்ணின் மூலமாக நாச்சியப்பனுக்கு வட்டி பணத்தை கேட்டு உரையாடல் செய்துள்ளேன் என்றால் நினைவில்லை. 30.11.2024 ல் நாச்சியப்பன் வினைத்தீர்த்தான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை எ னது வாட்ஸ் அப் எண்ணிற்கு அனுப்பியுள்ளார் என்றால் இல்லை. 2023 முதல் 2024 அக்டோபர் வரை நாச்சியப்பன் எனக்கு மாதம்தோறும் பணம் அனுப்பியுள்ளார் என்றால் சரிதான், நாச்சியப்பனுக்கும் எனக்கும் இதற்கு முன்பு வரவு செலவு இருந்தது. நாச்சியப்பனின் ஊழியர் அஜீஸ் எனக்கு வங்கி மூலமாக பணம் செலுத்தியுள்ளார் என்றால் நினைவில்லை.

5) எதிரியின் கணவர் நாச்சியப்பன் பொறியாளர் என்றாலும், அவருக்கு வீடு கட்டி விற்பதற்கு இடம் தேவைப்பட்டது என்றாலும், இடங்கள் என் மூலமாக வாங்குவார் என்றாலும் சரியல்ல. அவ்வாறு நிலம் வாங்கும்போது பிப்ரவரி 2023 ல் நாச்சியப்பன் என்னிடம் பணம் பெற்றார் என்றால் பொதுவாக பணம் வாங்குவார், தேதி குறிப்பாக நினைவில்லை. நாச்சியப்பன் என்னிடம் இருந்து பெற்ற தொகைகளை கொடுத்து முடித்துவிட்டாரா என்றால் கொடுத்து முடித்து விட்டார். பிப்ரவரி 2023 ல் நாச்சியப்பன் என்னிடம் இருந்து பணம் பெற்றார் என்றாலும், அப்போது செக்யூரிட்டிக்காக அவரது காசோலை 310018 மற்றும் அவரது மனைவியின் வழக்கு காசோலையை கொடுத்திருந்தார் என்றால் சரியல்ல, பணம் பெற்ற தேதி 01.07.2025 ல் வழக்கு காசோலை கொடுத்தார். பிப்ரவரி 2023 ல் நாச்சியப்பன் பெற்ற தொகையை ரொக்கமாக மற்றும் வங்கி மூலமாக திருப்பி செலுத்தியுள்ளார் என்றாலும், காசோலையை நான் திருப்பி கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல, வங்கி மூலமாக எதுவும் கொடுக்கவில்லை, ரொக்கமாக கொடுத்துவிட்டார். நான் அப்போது காசோலை பெறவில்லை. எதிரி எந்த பணமும் பெறவில்லை என்றால் சரியல்ல, பணம் பெற்றதால்தான் வழக்கு காசோலை கொடுத்தார். எதிரி வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறார் என்றாலும், அவர் பணிக்கு செல்லவில்லை என்றாலும் அது பற்றி எனக்கு

தெரியாது. நான் நேரடியாக அல்லது தொலை பேசி மூலமாக எதிரியை தொடர்பு கொண்டுள்ளேனா என்றால் தொடர்பு கொண்டுள்ளேன். எதிரியின் தொலைபேசி எண் என்னிடம் உள்ளதா என்றால் தற்போது இல்லை. எதிரியிடம் கேட்டுக்கொண்டுதான் வழக்கு காசோலையை வங்கியில் செலுத்தினேன் என்றால் இரண்டு மாத கால அவகாசம் கேட்டார், அதன்பின்பு கேட்டு வங்கியில் செலுத்தினேன். தொலைபேசி மூலமாகத்தான் தொடர்பு கொண்டேன் என்றால் சரிதான், யார் தொலைபேசி என்றால் எதிரி அலமேலு. எதிரியை எனக்கு தெரியாது என்றாலும் அவரது தொலைபேசி எண் என்னிடம் இல்லை என்றாலும், எதிரி என்னிடம் பணம் கேட்டதே இல்லை என்றாலும் சரியல்ல, பணம் கேட்டார். எதிரியின் கணவர் நாச்சியப்பன் பெற்ற பணத்திற்குதான் செக்யூரிட்டிக்காக 2023 ல் கொடுத்து வைத்திருந்த காசோலையை பொய்யான சங்கதிகளின் அடிப்படையில் பொய்யாக இந்த வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

VALLIMANALAN S A

Digitally signed by VALLIMANALAN S A
Date: 2026.07.08 13:45:15 +0[illegible]00

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
காரைக்குடி.